மோடி, அமித்ஷா ராஜினாமா செய்தார்களா?

பழனிசாமிக்கு அமைச்சர் கே.என்.நேரு கேள்வி... முதல் பக்கத் தொடர்ச்சி

"கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும்" எனப் பிதற்றியிருக்கிறார் பழனிசாமி. அவருடைய பொறுப்பில் கட்சி வந்த பிறகு ஒரு தேர்தலிலும் அதிமுக வெற்றி பெறவில்லை. 2024 நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியைச் சேர்த்தால் தொடர்ந்து 9 தோல்விகளைச் சந்தித்த வரலாற்றுப் பெருமைக்குரிய பழனிசாமிக்குப் பித்தம் தலைக்கு ஏறிவிட்டது. அதனால்தான் முதலமைச்சரை ராஜினமா செய்யச் சொல்கிறார். பழனிசாமி அவர்களே... உங்கள் முதுகைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். கறை படிந்த வரலாறு தெரியும்!

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு! ராஜினாமா செய்தாரா?

ஸ்டெர்லைட்டுக்கு எதிராகப் போராடிய 13 அப்பாவிகளைத் துள்ள துடிக்கத் தூத்துக்குடியில் சுட்டுக் கொன்றது உங்கள் ஆட்சியில்தானே! அப்போது நீங்கள் ராஜினாமா செய்தீர்களா?

பொள்ளாச்சியில் நூற்றுக்கணக்கான இளம் பெண்களைக் கடத்திக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் அதிமுக நிர்வாகி அருளானந்தம் கைதானபோது அபலைகளின் கண்ணீரைத் துடைக்க முதலமைச்சர் நாற்காலியைத் துறந்தீர்களா?

முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா வாழ்ந்த கொடநாட்டிலேயே கொலை, கொள்ளைகள் நடந்த போது, தலைவி வாழ்ந்த இல்லத்தின் இரத்தக் கறையைத்துடைக்கபதவியைத்தூக்கியெறியாமல் இருந்தது ஏன்?

குட்கா ஊழலில் உங்கள் அமைச்சர் விஜயபாஸ்கர் சம்பந்தப்பட்டபோது பழனிசாமி பல்லையா குத்திக் கொண்டிருந்தார்?

முதல்வரை ராஜினாமா செய்யச் சொல்ல அருகதை கிடையாது!

சாத்தான்குளத்தில் தந்தை ஜெயராஜ், மகன் பென்னிக்ஸ் இருவரும் போலீஸ் லாக்அப்பில் கொல்லப்பட்டு, காவல்நிலையம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டபோது காவல்துறைக்குப் பொறுப்பு வகித்த பழனிசாமி ராஜினாமா செய்தாரா?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும் எனச் சொல்ல உங்களுக்கு அருகதை இருக்கிறதா?

அப்போது மட்டும் விசாரணை ஆணையம் தேவைப்பட்டதா?

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் நீதிபதி கோகுல்தாஸ் விசாரணை ஆணையத்தைத் தமிழ்நாடு அரசு அமைத்திருக்கிறது. ஆனால், "ஒரு நபர் ஆணையம் அமைத்தாலும் மக்கள் மத்தியில் நம்பகத்தன்மை ஏற்படாது" என்று சொல்கிறார் பழனிசாமி. ஜெயலலிதா மரணத்துக்கு சி.பி.ஐ விசாரணையை மறுத்து, அதற்குப் பதிலாக நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தை ஏன் பழனிசாமி அமைத்தார்? அப்போது மட்டும் விசாரணை ஆணையம் தேவைப்பட்டதா? அன்றைக்கு நம்பகத்தன்மை பாதுகாக்கப்பட்டதா?

விஷச்சாராயம் நிச்சயம் தடுக்கப்பட வேண்டும். அதில் யாருக்குமே மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால், இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் விஷச் சாராய மரணங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதில், தமிழ்நாடு கடைசி இடங்களில்தான் இருக்கிறது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கள்ளச்சாராய சாவு!

ஒன்றிய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) அறிக்கையின்படி, 2017இல் 1,497 கள்ளச் சாராய வழக்குகள் பதிவாகி, 1,510 பேர் உயிரிழந்தனர். அதிகபட்சமாகக் கர்நாடகாவில் 256 பேரும் மத்தியப் பிரதேசத்தில் 216 பேரும், ஆந்திராவில் 183 பேரும், பஞ்சாபில் 170 பேரும், அரியானாவில் 135 பேரும், புதுச்சேரியில் 117 பேரும் சத்தீஸ்கரில் 104 பேரும் உயிரிழந்துள்ளனர்.

2018ல் 1,365 பேர் கள்ளச் சாராயத்தால் இறந்தனர். இதில், அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 410 பேரும் கர்நாடகாவில் 218 பேரும், அரியானாவில் 162 பேரும், பஞ்சாபில் 159 பேரும், உத்தரப் பிரதேசத்தில் 78 பேரும், சத்தீஸ்கரில் 77 பேரும், ராஜஸ்தானில் 64 பேரும் உயிரிழந்தனர். 2019ல் கள்ளச் சாராயத்தால் நாட்டில் 1,296 பேர் இறந்தனர். கர்நாடகாவில் கலப்பட சாராயம் குடித்து அதிகபட்சமாக 268 பேர் உயிரிழந்தனர். பஞ்சாபில் 191 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 190 பேரும், சத்தீஸ்கரில் 115 பேரும், அசாமில் 98 பேரும், ராஜஸ்தானில் 88 பேரும் உயிரிழந்தனர்.

2020இல் கொரோனா பரவிய காலத்திலும் கூட கள்ளச் சாராய மரணங்கள் நடந்தன. நாடு முழுவதும் 931 கள்ளச் சாராய வழக்குகள் பதிவாகி 947 பேர் உயிரிழந்தனர். அப்போது அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 214 பேரும், ஜார்க்கண்டில் 139 பேரும், பஞ்சாபில் 133 பேரும், கர்நாடகாவில் 99 பேரும், சத்தீஸ்கரில் 67 பேரும் கள்ளச்சாராயத்தால் உயிரிழந்தனர்.

2021ல் இந்தியா முழுவதும் 708 சட்டவிரோத போலி மது அருந்திய சம்பவங்கள் நடந்தன. அதில் 782 பேர் இறந்து போனார்கள். இந்த மரணத்தில் அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 137 பேரும் பஞ்சாபில் 127 பேரும் மத்தியப் பிரதேசத்தில் 108 பேரும் கர்நாடகாவில் 104 பேரும் ஜார்க்கண்டில் 60 பேரும், ராஜஸ்தானில் 51 பேரும் இறந்தார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் பார்த்தால் மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாடு அவ்வளவு மோசமான இடத்தில் இல்லை. இருந்தாலும் விஷச் சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஜெயலலிதா ஆட்சியில் கள்ளச் சாராய சாவு ஏற்படவில்லையா?

கள்ளச் சாராயம் குடித்து மரணங்கள் நடப்பது திமுக ஆட்சியில் மட்டும்தான் என்பது போல அதிமுக பேசி வருகிறது. அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் 2001இல் பண்ருட்டியில் கள்ளச்சாராயத்திற்கு 52 பேர் பலியானார்கள். அதன் பிறகு அதே ஆண்டில் காஞ்சிபுரம், செங்குன்றம் பகுதிகளில் கள்ளச்சாராயம் அருந்தி 30 பேருக்குமேல் இறந்தார்கள். 1993 ஜனவரியில் விழுப்புரம் அருகே சித்தலிங்கமடம் கிராமத்தில் விஷச் சாராயம் குடித்து 9 பேர் இறந்தார்கள். அதே ஆண்டு டிசம்பரில் திருத்தணி அருகே திருவாலங்காடு பகுதியில் கள்ளச் சாராயம் அருந்தி 7 பேர் பலியானார்கள். 1996 ஜனவரியில் திருச்சி உறையூரில் விஷச் சாராயம் அருந்தி 10 பேர் பலியானார்கள். அப்போதெல்லாம் கள்ளச் சாராயத்தைத் தடுக்க அன்றைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால், அதற்காக முதலமைச்சர் பதவியை அம்மையார் ஜெயலலிதா ராஜினாமா செய்யவில்லை.

பாஜக ஆளும் மாநிலங்களிலும் இப்படியான கள்ளச்சாராய மரணங்கள் அதிக அளவில் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக அந்த மாநில முதலமைச்சர்கள் எல்லாம் ராஜினாமா செய்துவிட்டார்களா? குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரின் மஜுர்காம், நகவ் பகுதிகளில் 2009 ஜூலையில் கள்ளச் சாராயத்துக்கு 136 பேர் பலியானபோது அங்கே மோடிதான் முதலமைச்சராக ஆட்சி செய்து கொண்டிருந்தார். உள்துறை அமைச்சராக இருந்தவர் அமித் ஷா. அவர்கள் இருவரும் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று ராஜினாமா செய்தார்களா?

மக்களின் நம்பிக்கையை முழுவதுமாக இழந்து தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் பழனிசாமி, சொந்தக் கட்சியினரிடமும் செல்வாக்கை இழந்துவிட்டார். இதனைத் திசைதிருப்பி, தனது இருப்பைத் தக்கவைக்கத்தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டுமென வீராவேசம் காட்ட முயற்சி செய்துகொண்டிருக்கிறார். யார் காலையும் பிடித்து முதலமைச்சர் ஆனவர் அல்ல எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் பேராதரவுடன் ஆட்சி செய்து, தமிழ்நாட்டினை முன்னேற்ற நாளும் செயல்பட்டு வருகிறார். ஆகவே, பகல்கனவைக் காணுவதைப் பழனிசாமி நிறுத்திவிட்டு, பாஜகவிடம் அடகு வைக்கப்பட்டு, தற்போது மூழ்கும் கப்பலாக உள்ள தனது கட்சியைப் பற்றிக் கவலைப்படும் வேலையைப் பார்க்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அறிவிக்கப்படாத அவசர நிலையை 10 ஆண்டுகளாக

பா.ஜ.க. பிரகடனப்படுத்தி உள்ளது!

மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா குற்றச்சாட்டு!

டெல்லி, ஜன. 28 -

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் அறிவிக்கப்படாத அவசர நிலையை பாரதிய ஜனதா கட்சி பிரகடனப் படுத்தி உள்ளதாக திமுக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் மைய அரங்கில் குடியரசுத் தலைவர் உரையாற்றிய நிகழ்வில் கலந்து கொண்ட பிறகு திமுக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா டெல்லியில் அவரது இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய திருச்சி சிவா, அவசர நிலை குறித்து குடியரசுத் தலைவர் என்று பேசியுள்ளார். அவசர நிலையில் அதிகம் பாதிக்கப்பட்ட கட்சி திராவிட முன்னேற்ற கழகம் எனவும் அவசர நிலை நாட்டில் பிரகடனப் படுத்த ப்பட்டது என்பது மறைக்கப்பட வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.ஹ

50 ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட அவசரநிலை அவை என்றால், கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் அறிவிக்கப்படாத அவசர நிலை செயல்பாட்டில் உள்ளதாகவும், மத்திய அமைப்புகள் மூலமாக எதிர்கட்சியினர், முக்கிய அரசியல்வாதிகள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் என அறிவிக்கப்படாத அவசர நிலையை பாஜக கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இனிமேல் அவசர நிலை வரவே கூடாது என பாரதிய ஜனதா கட்சி எண்ணுகிறது என்றால் அவசர நிலையின் போது செய்யப்பட்ட மாற்றங்களை மீண்டும் திருத்தம் செய்ய வேண்டும் எனவும், குறிப்பாக மாநில பட்டியலில் இருந்த கல்வியை அவசர நிலையின் போது பொதுப் பட்டியலுக்கு மாற்றப் பட்டதாகவும், ஏன் அதனை மீண்டும் மாநில பட்டியலுக்கு பாரதிய ஜனதா கட்சி மாற்ற முன்வரவில்லை? எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும் இன்று குடியரசுத் தலைவர் உரை ஆளும் அரசாங்கம் எழுதிக் கொடுத்த உரை எனவும் அதிலும் குறிப்பாக பெரும்பான்மை பெற்ற அரசாங்க ஒன்றிய அரசு உள்ளது என குடியரசுத் தலைவர் குறிப்பிட்டது அதிகம் சிரிப்பை ஏற்படுத்துவதாக கிண்டல் அடித்தார். அறுதி பெரும்பான்மை கூட இல்லாத கட்சியாக பாஜக வெற்றி பெற்றுவிட்டு கூட்டணிக் கட்சிகளின் தயவோடு ஆட்சி அமைத்துள்ள அவர்கள் பெரும்பான்மை பெற்ற கட்சி என நாடாளுமன்றத்தில் சொல்கிறார்கள் எனவும் திருச்சி சிவா குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்வில்

விடியல் தந்துள்ளது 'விடியல் பயணத் திட்டம்!'

'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூன் 28 -

தமிழ்நாடு முதல்வரான மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட பெண்களுக்கு இலவச பயணத் திட்டம் தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்வில் விடியலைத் துந்துள்ளது என 27.6.2024 தினகரன் தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

ஜூன் 27, 2024 விடியற்கிழமை

விடியல் தந்த பயணம்

2021, மே 7ம் தேதி தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலினின் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே, அரசு நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமின்றி இலவச பயணத்திட்டத்தை அறிமுகம் செய்தார். அன்று விதையாக போட்டது, இன்று விருட்சமாக பிரமாண்டமாக வளர்ந்து நிற்கிறது.

ஒரு அரசின் இலவசத் திட்டங்களை ஆதரிப்பவர்கள் ஒருபுறம் இருந்தாலும், எதிர்ப்பதற்கும் சிலர் இருப்பார்கள். ஆனால், தமிழ்நாடு அரசின் இந்த திட்டத்தை ஆதரித்தவர்களே அதிகம். காரணம், தினமும் 54 லட்சம் பெண்கள் இந்த பஸ்களில், கட்டணமின்றி பயணிக்கின்றனர். பள்ளி, கல்லூரி மாணவிகள், அரசு, தனியார் அலுவலக பெண் ஊழியர்கள், இல்லத்தரசிகள், கூலி வேலைக்கு செல்லும் பெண்கள் அனைவரும் இதில் அடக்கம்.

இதன்மூலம் ஒரு மாதத்துக்கு ரூ.550 முதல் ரூ.1,250 வரையும், சராசரியாக ரூ.888 வரை சேமிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மாணவ, மாணவிகள் 15 சதவீதம், நடுத்தர வயது பெண்கள் 45 சதவீதம், குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் 15 சதவீதம் என சுமார் 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த பயணத்தை மேற்கொள்கின்றனர். சென்னையில் மட்டும் இதுவரை சுமார் 88.87 கோடி, மதுரையில் சுமார் 30 கோடி, திருச்சி யில் சுமார் 25.50 கோடி, செங்கல்பட்டு மாவட்டத்தில் 4.31 கோடி பயணங்கள் என ஒட்டுமொத்தமாக, தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 490 கோடிக்கு மேல் இலவச பயணங்கள் நிகழ்ந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

2021ல் திட்டம் துவங்கிய போது, தினமும் சுமார் 35 லட்சம் பயணங்கள் நிகழ்ந்த நிலையில், தற்போது தினமும் 55 லட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 3 நிதியாண்டுகளில் இலவச பஸ் பயண திட்டத்திற்காக ரூ.6,946 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், தற்போது நடப்பு நிதியாண்டுக்கு ரூ.3,050 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகரங்கள், கிராமங்களில் இயங்கி வந்த பேருந்துகள், கடந்த பிப்ரவரி மாதம் முதல் மலைப்பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. திருநங்கைகள் சுமார் 29 லட்சம் பயணங்களும், மாற்றுத் திறனாளி கள் தரப்பில் 3.93 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இந்த திட்டம் பிற மாநிலங்களிலும் அமல்படுத்தப்பட்டு வருவதன் மூலம், இந்த விடியல் பயணத்திட்டத்தின் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம். பொதுவாக, அரசாங்கங்கள் இலவசங்களை அறிவிப்பது இயல்பான ஒன்றுதான். ஆனால், விடியல் பயணத்திட்டம் இது போன்றதல்ல. பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளை எடுத்துக் கொள்வோம். கிராமப் புறங்களில் பெண்களை படிக்க வைப்பதே பெரிய விஷயம். இதில் கல்வி கட்டணம் தாண்டி, பேருந்துகளில் பயணக் கட்டணம் கட்டுவது மலைப்பாக தெரியும். இத்திட்டம் மூலம் அந்த பணம் சேமிக்கப்படுகிறது.

அதேநேரம் அந்த குடும்பம் மகளிர் உரிமைத்தொகை பெறும் வீடாகவும் அமைகிறது. வீடு ஒன்றுதான். ஆனால், அரசால் ஒரே நேரத்தில் 2 திட்டங்கள் மூலம் வரவும் கிடைக்கிறது. சேமிக்கவும் முடிகிறது. இதனை கணக்கிடும்போது, அரசினால் ஒரு குடும்பம் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.3 ஆயிரம் வரை பயனடைகிறது. இதேபோல குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் பெண்கள், தங்கள் வருமானத்தில் 15 முதல் 20 சதவீதம் வரை பேருந்து கட்டணமாக செலவழிக்க வேண்டியிருக்கும். அந்த தொகையும் மிச்சமடைகிறது. இப்படி தமிழ்நாட்டு பெண்கள் வாழ்வில் விடியலை தந்துள்ள, விடியல் பயண திட்டம் தொடர வேண்டுமென்பது தமிழக மக்களின் விருப்பமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய இணைப்புச் சாலை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றிடுக!

பாளையங்கோட்டையில் மென்பொருள் வேலைவாய்ப்பு மையம் - ஐ.டி.பூங்கா அமைப்பீர்!

சட்டப்பேரவையில் பாளையங்கோட்டை தொகுதி உறுப்பினர் மு.அப்துல் வஹாப் கோரிக்கை!

சென்னை, ஜூன் 28-

சட்டப்பேரவையில் பாளையங்கோட்டை தொகுதி உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பேசுகையில், "பாளையங்கோட்டை யில் மென்பொருள் வேலைவாய்ப்பு மையம் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைத்திடுமாறும், புதிய இணைப்புச் சாலை அமைக்கும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிடு மாறும் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் நிதி நிர்வாகம் மற்றும் சட்டத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பாளையங்கோட்டை தொகுதி உறுப்பினர் மு. அப்துல் வஹாப் பேசியதாவது:

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மூவரின் வழிநின்று செயல்பட்டு, மூவரின் ஓர் உருவாக திகழும் உலகம் போற்றும் உத்தமத் தலைவர்; தமிழினத்தின் தனித்துவ தலைவர்; சுற்றிவரும் சூழ்ச்சிகளில் துவண்டுபோகாமல், கற்றவரும், மற்றவரும் கண்திகைக்க ஆண்டு வரும் உற்ற தலைவர்; எழிலாட்சி செய்துவரும் ஏற்றமிகு தலைவர்; தெற்கிலிருந்து திசைகளை மாற்றிய திராவிட மாடல் நாயகர்; இந்தியா போற்றும் இரும்புத் தலைவர்; திராவிடப் புயலாய் வடதிசை கலக்கும் தென்திசை சூரியன்; நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது வென்ற நானிலம் போற்றும் நாயகர் வல்லமைமிக்க சூரியப் படைத்தலைவர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

இளைஞர்கள் கொண்டாடும் எழுச்சிமிகு இளவரசர், எதிர்ப்பலைக்கு அஞ்சாமல் எரிமலையாய் எழுந்த இளஞ்சூரியன், தமிழ் வளர்த்த வம்சத்தில் தமிழ் உலகம் ஆளும் அம்சத்தில் காற்றைப்போல், கனலைப் போல், ஒளியைப் போல், கார் மேகப் புனலைப் போல், ஊற்றைப் போல், மாற்றாரை வெற்றி கண்ட மாவீரன், இளைஞர் படையை இலட்சியப் படையாக, அறிவுப் படையாக, எதிரிகளை அதிர வைக்கும் பெரும்படையாக நடத்தும் இளந்தலைவர், வருங்கால தமிழகத்தை வழிநடத்த இருக்கின்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் மரியாதைக்கும், மதிப்பிற்குமுரிய திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், அவை முன்னவர் உட்பட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம்.

இன்று நீதி நிர்வாகம் மற்றும் சட்டத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கேற்று உரை நிகழ்த்த வாய்ப்பு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும் அன்பு கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றேன்.

வெள்ள நிவாரணம்! முதல்வருக்கு நன்றி!

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பேய் காற்றுடன்கூடிய பெருமழை. திருநெல்வேலி மாவட்டத்தில் எதிர்பாராமல் ஒரே நாளில் பெருவெள்ளமென ஊரை சூழ்ந்து வரலாறு காணாத பேரிழப்பு ஏற்பட்டது. உணவுக்கும், உடைமைக்கு, உயிருக்கும் பாதுகாப்பற்ற நிலை நிலவிய நேரத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல்லை மாவட்ட மக்களுக்கு ஓடி வந்து தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக பார்வையிட்டு, தண்ணீரில் மூழ்கியிருந்த நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்தில் தண்ணீரை வற்ற வைத்து, பேருந்து நிலையத்திலேயே மக்களுக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளை செய்தார். குடும்பத்திற்கு ரூ.6,000/ வழங்கி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவரையும் பாதுகாத்து நிவாரண உதவிகள் செய்து இழப்பீடு தந்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

அமைச்சருக்கு நன்றி!

அதுபோல, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரடியாக வெள்ளம் பாதித்த எங்கள் பகுதிகளுக்கெல்லாம் வந்து, அரசு இயந்திரங்களை மின்னல் வேகத்தில் முடுக்கிவிட்டு நிவாரணப் பணிகளை திறம்பட மேற்கொண்டார். தொடர்ந்து நெல்லை மாவட்ட எல்கையான கருங்குளம் யூனியனில் பாளையங்கோட்டை திருச்செந்தூர் சாலையில் உள்ள கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன என்ற செய்தி கிடைத்தவுடன், அங்கிருந்து நடந்தே அப்பகுதிகளுக்குச் சென்றார். கும்மிருட்டு, மின்சாரம் இல்லை, தொலைதொடர்பு இல்லை, அப்படிப்பட்ட சூழ்நிலையில் வெள்ளத்தின் சத்தம் கேட்கின்றது, அந்த வெள்ளத்தை வெல்லத் தெரிந்த வாலிபச் சிங்கம் முன்னே நடந்து செல்ல நானும், எங்கள் பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும் எங்களோடு பல ஆயிரக்கணக்கான இளைஞர்களும் அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு நடந்தே சென்று உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அந்த மக்களின் குறைகளைக் கேட்டு, இரவோடு இரவாக பாதிக்கப்பட்ட மீனவச் சமுதாய மக்களை மீட்பதற்கான நடவடிக்கையில் அவரே நேரடியாக சென்றார். 80 படகுகளில் அந்த மக்களைக் காப்பாற்றியதற்காக அவருக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்த மக்களைக் காத்த பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோல, மழைபெய்ய தொடங்கிய அன்றைய நாளிலிருந்து எங்களோடு தங்கியிருந்து அந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளையாற்றிய எங்கள் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களும் சகஜ நிலை திரும்பும்வரை எங்களோடு இருந்தார். அதுபோல், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும் எங்களோடு இருந்தார். அதபோல், வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள், துண்டிக்கப்பட்ட பாலங்கள் ஆகியவற்றை உடனடியாக, துரிதமாக சீர்செய்து கொடுத்த பொதுப் பணித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. எ.வ. வேலு அவர்களும் அன்றைக்கு எங்கள் மாவட்ட மக்களோடு இருந்து உதவிகளை செய்தார்கள் என்பதை மறக்க முடியாது. அதுபோல், முன்னாள் பொறுப்பு அமைச்சர் திரு. இராஜகண்ணப்பன் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களும் அங்கே வருகை தந்து மக்களுக்கு நிவாரணப் பணிகளை செய்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்துகின்றேன்.

வாகன வசதி தேவை!

பாளையங்கோட்டையில் பொறியியல் மென்பொருள் தொழில்நுட்பம் கணினி அறிவியல் மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் வேலையின்றி தவிக்கின்றனர் அல்லது வெளியூர் வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்கின்றனர். எனவே, பாளையங்கோட்டையில் பெருமாள்புரம் மத்திய சிறைக்கு தெற்குப் பகுதியில் தற்காலிக பேருந்து நிலையம் செயல்பட்ட இடத்தில் மென்பொருள் வேலைவாய்ப்பு மையம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்து உள்ளூர் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாநகர எல்லைக்குள் ஏற்படுகிற போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு கண்டிட, பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கம் எதிரில், மாநில தமிழ்சங்கம் அருகில் தொடங்கி தெற்குபுற வழிச்சாலையை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச்சாலை அமைக்கும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீபுரத்திலிருந்து சி.என். கிராமத்தை இணைக்கும் வகையில் ஒரு புதிய இணைப்பு சாலை உருவாக்கிட கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி ஹைகிராவுண்ட் உயர்தர சிறப்பு மருத்துவமனையில் M.R.I. SCAN வசதி ஏற்படுத்தி தருமாறு அன்போடு கேட்டுக் கொள் கின்றேன். பழைய மருத்துவமனையிலிருந்து நோயாளிகள் உயர்தர சிறப்பு மருத்துவமனைக்கு செல்வதற்கு மருத்துவமனைக்கு சொந்தமான தனியாக வாகன வசதி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய நீதிமன்றம் அமைத்திடுக!

தாமிரபரணி ஆற்றின் முறப்பாடு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.23 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தியமைக்கு முதலமைச்சரின் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின்கீழ் ஒதுக்கியமைக்கு நன்றித் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைபோல மேலப்பாளையம் பகுதிக்கு தாமிரபரணி ஆற்றுப் படுகையில் விளாகம் அல்லது திருவேங்கடநாதபுரத்தில் புதியதாக நீர்உறிஞ்சு கிணறுகள் அமைத்து நீரேற்றும் நிலையமும் அமைத்து புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி கொக்கிரகுளத்தில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த அரசு வளாகம் அமைக்க ரூ.104 கோடியே 50 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.

தேவையான நிதி ஒதுக்கி, உரிய அனுமதி வழங்கிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டடம் கட்டுவதற்கு ரூ.61 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கி புதிய நீதிமன்ற கட்டடம் கட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன். பாளையங்கோடையில் வெகுசிறப்பாக நடைபெற்றுவரும் தசரா விழா நடக்கும் எருமைகிடா மைதானத்தில் அக்கிரமிப்புகளை அகற்றி அறநிலையத் துறை சார்பில் சுற்றுசுவர் அமைத்துத்தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டை இலந்தகுளத்தில் சிறுவர் படகு குழாம் அமைக்கவும், சுற்றுச்சூழல் நீர்நிலைப்பூங்கா அமைக்கவும், 2009 ஆம் ஆண்டு ரூ.19 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திட்டம் தீட்டப்பட்டது. அத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் அனைத்து விளையாட்டுக்களுக்கும் உரிய செயற்கை இழை மைதானத்தை புனரமைத்து புதுப்பித்திட வேண்டுமாறு அன்போடு கேட்டுக்